செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்கம் - 13 நாள்:10.01.2023

## மொழியியல் புலம்

நடத்தும்

## தொல்காப்பிய மொழியியல்

# Tholkāppiya Linguistics

**(01.02.2023 - 07.02.2023)**

## அறிவிப்பும் அழைப்பும்

ஒரு மொழியை அறிவியல் அடிப்படையில் அணுகி ஆராயும்முறையை மொழியியல் ஆய்வு என்பர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரின் அணுகுமுறை மொழியியல் சார்ந்ததாகும் என்பதில் ஐயமில்லை. மொழியியல் இன்று வளர்ந்துவரும் துறை, மேனாடுகள் பலவற்றில் சிறந்த வளர்ச்சியும் பரந்த வாழ்வும் கொண்டு விளங்குவது இத்துறை, இத்துறையின் கருவினைப் பண்டை இந்திய இலக்கண நூல்களிலும் *கிரேக்கம்*, *இலத்தீன்* இலக்கண நூல்களிலும் காணலாம். இந்நிலையில் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எழுதப்பட்ட தமிழ் மொழி இலக்கண நூலாம் தொல்காப்பியத்தில் காணப்படும் மொழியியல் கருத்துகளை ஆய்ந்து அறுதியிட்டு வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக நடத்தப்படுகிறது தொல்காப்பிய மொழியியல் பயிலரங்கு. தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரு பகுதிகளில் காணக்கிடைக்கும் இலக்கணக் கொள்கைகள் பலவற்றை வெளிக்கொணர்வது முதன்மை நோக்கமாகும். தொல்காப்பியத்தின் பகுப்புமுறை இன்றைய மொழியியலாளரின் பகுப்புமுறையைப் பெரிதும் ஒத்துள்ளது எனலாம். மொழியியலாளர் ஒரு மொழிக்குரிய இலக்கணத்தை ஆராயும்போது முதலில் அதன் ஒலியன்களையும் ஒலியன்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களையும் உருபன்களையும் தொடரமைப்பையும் பற்றி வரிசையாக விளக்குவர்.

அவ்வகையில் தொல்காப்பியத்தை ஒலிப்பியல் (Phonetics), எழுத்தியல் (Phonology), எழுத்திலக்கணம் (Orthography), உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax), புணரியல் (Morphophonemics) என்னும் அடிப்படையில் ஆராயலாம். சொற்பிறப்பியல் (Etymology), சொற்பொருளியல் (Semantics), அகராதிக்கலை (Lexicography), கோட்பாட்டு மொழியியல், ஒப்பீட்டு மொழியியல், விளக்க மொழியியல், மொழியியற் குறியீட்டியல் (Linguistic typology), குறியீட்டு மொழியியல் (Semiotics), பயன்பாட்டு மொழியியல், வரலாற்று மொழியியல், எழுத்துமுறை, சமூக மொழியியல், திறனாய்வுப் பேச்சுக்கூறுபாடு, உள மொழியியல், மொழிக்கற்றல், கிளைமொழியியல், மானிட மொழியியல், நரம்பியல் மொழியியல், தடயவியல்

மொழியியல் மற்றும் கணினி மொழியியல் என நவீன மொழியியலின் பல்வேறு வகைமைகளை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பிய இலக்கணத்தை ஆய்வு செய்வதே இப்பயிலரங்கின் நோக்கம் ஆகும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழியியல் புலம் நடத்தும் இப்பயிலரங்கில் பல்கலைக்கழகம் / கல்லூரிப் பேராசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெற அழைக்கப்படுகின்றனர்.

**பயிலரங்க விதிமுறைகளும், விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 25
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 01.02.2023 முதல் 07.02.2023 முடிய ஏழு நாட்கள்
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 1.00 & மாலை 2.00 – 5.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopling@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைப்பேசி/ அலைப்பேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதிநாள் 24.01.2023. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு 25.01.2023 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்
13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 28 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

## மொழியியல் புலம்
## நடத்தும்
## தொல்காப்பிய மொழியியல்

# Tholkāppiya Linguistics

பயிலரங்கம் – 13
(01.02.2023 - 07.02.2023)

**விண்ணப்பப் படிவம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்<br>Name | தமிழ்<br>English | | | | | நிழற்படம்\|Photo | |
| 2. | பிறந்த நாள் / வயது\|<br>Age / Date of Birth | | | | | | | |
| 3. | பாலினம் \| Gender | | | | | | | |
| 4. | வகுப்பு \| Class | பொது\|<br>General | | இ.பி.வ. \|<br>OBC | | பட்டியல் இனம் \|<br>SC. ST | | |
| 5. | கல்வித் தகுதி \| Educational Qualification | | | | | | | |
| 6. | பேராசிரியர்கள்/ ஆசிரியர்கள் நிறுவனத்தில் சேர்ந்த நாள்<br>Date of joining | தற்காலிகம் | | | | | | |
| | | நிரந்தரம் | | | | | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு<br>Ph.D. Research title | | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைப்பேசி/ மின்னஞ்சல் \|<br>University / College / Address (Phone / Email) | | | | | | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி)<br>\| Residency address (Phone) | | | | | | | |
| 10 | புலன எண் \| WhatsApp number | | | | | | | |
| 11 | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \|<br>Did you attend the workshop conducted by the CICT this academic year? If yes, please give details | ஆம் \| Yes<br>இல்லை \| No | | | | | | |
| | | | | | | | | |

நாள்:

இடம்: (கையொப்பம்)

பதிவாளர் / முதல்வர்/ துறைத் தலைவர்/
உரிய முத்திரையுடன்